# திறவுகோல்

2052 புரட்டாசி
மாத இதழ்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# முபாரக் கவிதைகள்...

விலை அதிகமென
பிடித்த தோசையை வாங்கி
உண்ணாமல்,
பிடிக்காத இட்லியினை
வாங்கி உண்பவர்களைத்
தான் நடுத்தர
வர்க்கமென்கிறது...காலம்!

***

எனக்கு
பிடித்தவர்களெல்லாம்
ஏமாற்றுகின்றவர்களாக
இருக்கிறார்கள்,
எல்லாமறிந்தும் நான்
ஏமாறுபவனாகவேயிருக்கிறேன்...
வானம் வேடிக்கை பார்க்கிறது!

***

சோர்ந்து போன செடியை
எழுப்பிக் கொண்டிருக்கின்றன...
நேற்று பெய்த மழைத்துளிகள்!

***

மரத்தின்
மிகப்பெரிய வேதனையை
ஒரு வரியில் சொல்லிக் கடக்கிறோம்...
பழுத்த இலை உதிர்ந்ததென!

***

நிறங்களால் பிரிந்தோம்
மதங்களால் பிரிந்தோம்
மொழிகளால் பிரிந்தோம்
இனி பிரிப்பதற்கென
வேறொன்றுமில்லை...
நாம் வாங்கி வந்த மனிதரென்ற
அடையாளத்தைத் தவிர!

***

என்னைப் போல
பேச நினைக்கிறாய்
என்னைப் போல
எழுத நினைக்கிறாய்
என்னைப் போல
வாழ நினைக்கிறாய்
என்னைப் போல
தேடல் கொள்கிறாய்
நான் நானாகவேயில்லையென
அறிந்தும் அறியாதது போலவே!

***

தலைக்கனத்தோடு
வாகனம் ஓட்டியவர்கள்
தலையில்லாமல் கிடக்கிறார்கள்...
விபந்து நடந்த சாலையில்...

**

உனக்கு
பிடிக்காததெல்லாம்
எனக்கும் பிடிப்பதில்லை ...
இப்போது என்னை!

**

வேலை முடிந்து வீடு திரும்புவதற்குள்
உறங்கிப் போன அம்மா,
தூக்கத்தில்
முனங்கிக் கொண்டிருக்கிறாள்...
மகன் சாப்டானா என!

**

விடைபெற்று
ஊருக்கு போகும் போதெல்லாம்
மழை பெய்கிறது...
அம்மாவின் கண்களில்!

–
மு.முபாரக்





அட்டைப்பட
ஓவியம்:

**இரா.மதுவர்ஷினி,**
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.

# சருகுக் கண்ணீர்

பூக்கள் மீட்டும் இசையில்
வண்டுகளாகிறது மனம்
சில்லென்ற வெளியில்
கொண்டாட அழைக்கிறது
மார்கழி காற்று
மௌனம் உலவும் தெருவில்
வெடித்துச் சிதறுகிறது
ஒளியொளியாய் வானம்
மூங்கில் காட்டைக் கடந்துவரும்
தென்றலுக்கு
இசையைச் செப்பனிட்டுப்
பாடம் புகட்டுகிறது
சாம்பல்நிறக் குயில்
காற்றின் காதை உராய்ந்து
புல்லரிப்பு செய்கிறது
மகிழம்பூ வாசம்
புலர்ந்தெழும் கதிரவனின் ஜாலங்களை
அலைகளில் கிடத்தி தாலாட்டுகிறது
பருவகால மழைநதி
நதியில் மிதந்து செல்கிறது
வயோதிக மரமொன்றின்
சருகுக்கண்ணீர்
கரையோரம் அமர்ந்து
ஆழத்தில் துளையிடுகிறது
மீன்கொத்தியின் நெடுநாள்பசி
வயிறு நிறைந்திருக்கும்
அரவின்முன் துள்ளி விளையாடுகிறது
நெடுநாள் உணவின்றி வாடும் தவளை
வான்முழுக்க தொடர்கின்றன
போவதும் வருவதுமான
பறவைகளின் சிறகசைப்பு
நான் இரசித்திருக்கிறேன்
நான் உயிர்த்திருக்கிறேன்
நான் மகிழ்வின் ஆழத்தில்
புதைந்திருக்கிறேன்.

## தனிமை எரிகல்

நகர்த்த வாய்ப்பற்ற இரவில்
பாறையென சுமையேற்றி
நசுக்கிப் பிழிகிறாய் இதயத்தை
பீறிடும் குருதியைப்
பிசாசின் தீராப்பசியோடு
குடித்துச் சுவைத்துத் திளைக்கிறாய்
உறங்கவிடாமல் விழிகளைக்
கொறிக்கும் விலங்காகி
வக்கணை செய்கிறது
உன் இலையுதிர்த்த நினைவுகள்
மணலற்ற ஆற்றில்
அடர்ந்து முளைத்திருக்கும்
வேலிக்காத்தான் மரமாய்
முள்நீட்டி காத்திருக்கிறாய்
விலகிடத்துணிந்த கூர்மையோடு
நெடுஞ்சாலை விரிவாக்கத்தில்
தகர்த்தெறியப்பட்ட
கோவிலின் பூசாரியைப்போல்
நடுத்தெருவில் கடவுளென
உன்னைத்தேடி நிற்கிறேன்
மோதி பொசுக்க வருகிறது
நீயற்றத் தனிமை எரிகல்.

## நாளையின் அசூரன்

எங்கோ அலறிக்கொண்டிருக்கும்
ஆந்தையின் குரலில்
எதிரொலிக்கிறது
நேற்றுமுடிந்த துயரம்
ஒரு குழந்தையின் சிரிப்பைக்
கடன்கேட்டு நிற்கிறது
கைவிடப்பட்ட வயோதிகம்
இரயில் நிலையத்தின் பாலத்தில்
துண்டினால் மூடி

இறந்துகிடப்பவருக்குத்
தீநுண்மியின் கவலையில்லை
மறந்துவிட்ட உறவினர்களுக்கு
இறுதிசடங்கின் அச்சமில்லை
வடக்கேயும் தெற்கேயும்
விரைந்துகொண்டிருக்கிற
மின்சார இரயில்களில்
நிரம்பியிருக்கிறது
வாழ்வின் பெரும்பாரம்
நடைபாதைகளெங்கும்
நகரும் கால்களில்
பாம்புகளாய் இறுகியிருக்கின்றன
நாளையின் அசூரம்
எதுவுமற்ற வெளியைப்
விற்கவும் வாங்கவும்
அபகரிக்கவும் ஆளவும்
முந்தியடிக்கின்றன
வன்மங்கள் மீதமர்ந்த
மாய சூட்சுமங்கள்
எதுவும் கிடைக்காமல்
தெருநாயொன்று மலத்தைநாடி
விரைகிறது
குப்பைத்தொட்டிகள் எங்கும்
நிரம்பி வழிகிறது
பொய்களின் இராஜ்யம்.

## தேயும் நிலவின் தீ

ஏமாற்றங்கள் நிகழ்வதை
வெளிப்படையாகத் தெரிந்தும்
நம்பிக் கொண்டிருக்கிறேன்
தொடர்ந்து உன்னை நான்
யாருமற்ற கானகத்தில்
வேண்டுமென்றே தொலைத்து
செல்கிறாய்
துளியும் வெறுப்பின்றி
தேடியலைந்து மீண்டும்
நிழலென அருகிருக்கிறேன்
சாமரம் வீசுகிறேன்
பணிவிடைகளால் உள்ளங்கவர
மெனக்கிடுகிறேன்
எதுவும் பிடிக்காமல் விலகியிருக்கிறாய்
நீ
இரவில் மார்பைத் துளையிடுகிறது
தேயும் நிலவின் தீயான சுடரொன்று!

## உயிரில் பெருகினாய்

விடாமல் தொடரி
சுடாமல் சுடரி
தொடாமல் படரினாய்
கொடாமல் அடரினாய்
விடைகளில்லா மொழிகளால்
மலரினாய்
தடைகளில்லாச் செழுமையால்
குழறினாய்
கனலில் புனலில் நெருங்கினாய்
மனதில் உயிரில் பெருகினாய்...

உழாமல் கிளறி
விழாமல் உளறி
விலாவில் முளறினாய்
விழாவாய் கமழினாய்
நிழல்களில்லா வெளியினில்
குளுங்கினாய்
முகில்களில்லாக் கிளையினில்
மினுங்கினாய்
விழியில் மொழியில் உருகினாய்
நினைவில் கனவில் மருகினாய்

தளிரி வளரி குலவினாய்
குயிலி மயிலி பழகினாய்

குழலி கழலி சினுங்கினாய்
குருதி சுருதி மிதங்கினாய்

எழிலி மழலி கிரங்கினாய்
இளகி உலவி விழுங்கினாய்
பருகி இறுகி முயங்கினாய்
அருவி குருவி எழும்பினாய்

கமிழி சிமிழி மயங்கினாய்
குமிழி குழவி வழங்கினாய்
திரும்பி திமிரி சுழற்றினாய்
விரும்பி அரும்பி நிரம்பினாய்!

–
பொன்.தெய்வா
ஐவேலி
விழுப்புரம் மாவட்டம்.





ஓவியம்:
**சாதனா,**
ஆறாம் வகுப்பு,
விருதாச்சலம்

# டேய் மனுசனுங்களா (சிறுகதை)

"டேய்  மனுசனுங்களா.... வந்து வண்டிய எடுங்கடா" என்று வீட்டு வாசலில் நின்று கத்திய இளம் மாடு...மிதுன் சக்கரவர்த்தியை... ஊஞ்சலில் இருந்து இறங்கியபடியே....." எத்தனை வாட்டி சொல்லிருக்கேன்... அவனுங்கள அப்டி கூப்பிடாதான்னு. அவுனுங்களுக்கு பேர் இருக்குல்ல... ரமேஷ்.... சுரேஷ்ன்னு..." கோபமாய் சொல்லி விட்டு.... அதே நேரம் சாந்தமான குரலில்..." பாவம்ல ஸ்வீட் ஹார்ட்..." வாலை ஆட்டி கொசுக்களை விரட்டிக் கொண்டே.... ஒரு தகப்பன் பாவனையில் அருகே வந்து நின்றது கிழட்டு மாடர்.

ராம நாராயணன் படத்தில் வரும் மாட்டை போல வாயைக் கோணித்துக் கொண்டு... .." அப்பா உங்களுக்கு தெரியாதது ஒண்ணுமில்ல... இவுனுங்க நம்மள எப்படியெல்லாம் ஆட்டி படைச்சானுங்க... தண்ணி வண்டில... வைக்கப்போர் வண்டில... .காய்கறி வண்டில... . நிலத்த உழுகன்னு போட்டு வாட்டி எடுத்தானுங்களே. அதுவும் சிட்டியே கார் பைக் வேன்னு போகும் போது அதுக்கு நடுவுலயும் வண்டிய இழுக்க விட்டு மானத்தை வாங்குனானுங்களே. இதுல கொஞ்சம் உடம்பு கிடம்பு சரி இல்லனா சாவடி அடிக்கறது. மாட்ட அடிக்கறாப்ல அடிக்கறானுங்கனு சொலவடையே உருவாக்கிட்டானுங்கப்பா.... எல்லாம் எகத்தாளம்.. பேச முடியுங்கற திமிரு. இப்ப எல்லாம் போச்சா.. காலம் மாறிடுச்சுப்பா. இப்ப நாம பேச ஆரம்பிச்சுட்டோம். அவனுங்க ஊமை ஆகிட்டானுங்க. சோறு வேணும்னா சொல் பேச்சு கேட்டு தான் ஆகணும்... அதுவும்.. அவனுங்க விளையாட்டுக்கு நம்மள பலி கொடுக்கறது... அவனுங்க போட்டிக்கு நம்மள ஓட வுடறது.. அதுல மீசையை வேற முறுக்கிக்குவானுங்க... என்னவோ இவனுங்களே நுரை தள்ளி ஓடி ஜெயிச்ச மாதிரி... பிக்காலி பசங்க..."

"சரி சரி.. காலைலயே மனுஷ புராணம் நமக்கெதுக்கு. நீ போற காரியத்துக்கு போ. துணைக்கு ராஜாவை கூட்டிகிட்டு போ.. " சொல்ல சொல்லவே ராஜா ஓடி வந்து வண்டியில் ஏறி குத்த வைத்து அமர்ந்தது.

"மிதுன் சக்ரவர்த்திண்ணா... வாங்க... வந்து வண்டிய எடுங்க... இந்த ரமேசும் சுரேசும் முறைக்கறானுங்க.." வால் ஆட்டிக் கொண்டே வாயை திறந்து நாய் பேசியது வாரம் முழுக்க கமகமக்கும் சொல்லாடல்கள்.

"சரிடா தங்கம்.. வந்துட்டேன்..." என்றபடியே மாடன் மிதுன் சக்ரவர்த்தி வந்து வண்டியை எடுக்க சுரேசும் ரமேஷும் வண்டியை இழுக்க ஆரம்பித்தார்கள்.

வண்டியை தன் பிள்ளை ஓட்டும் அழகைப் பார்த்து... மெய்மறந்து... பாக்யராஜ் படத்தில்

வரும் K.K சௌந்தர் போல..." நல்ல புள்ளைங்க" என்று கழுத்தை ஒரு திருகாணி பொம்மை போல ஆட்டி சிரித்தார் அப்பா மாடன்.

"ம்ம்ம்.....ஹோய்... ஹாய்.... வேகம்.....போகட்டும்...." சலீர் என வாலை முன் பக்கம் நிமிர்த்தி வளைத்தெடுத்து சுரேஷ் முதுகில் ஒரு போடு போட்டது மாடன் மிதுன் சக்கரவர்த்தி.

"அயோ.....பாவம்.... விட்ருங்க... வாயில்லா பூச்சிங்க..." நாக்கை கழுத்து வரை நீட்டி சப்பு கொட்டியது ராஜா.

"யாரு இதுங்களா.... ரெண்டு உலக போறே நடத்தின பிசாசுங்கடா. இருக்கற வயக்காட்டை எல்லாம் பிளாட் போட்டு வித்த முட்டா பயலுக. நாங்க மேய வழி இல்லாம செஞ்ச நய வஞ்சகனுங்க. உங்க இனத்துல.... கொஞ்சம் புசு புசுன்னு இருக்கறத வீட்டுக்குள்ளயும் உன்ன மாதிரி தோல் ஒட்டி இருக்கறதுங்கள வீதிலயும் விட்ட விளங்காதவனுங்க... இன்னும் உனக்கு விவரம் வேணும் மார்த்தாண்டா. சரி அண்ணனுக்கு டென்சன் ஏறி போச்சு... அந்த... பாட்ட போடு.. அதான்....இந்த ராமராஜன் பாடுன பாட்டு. மனுஷ பயங்கள்லயே அவர் ஒருத்தர்தான்யா மனுஷன். எங்களுக்காக என்னமா பாடிருக்கார்.. அந்த பாட்ட போடுய்யா கேப்போம்..." என்ற மாடன் சக்கரவர்த்தி சுரேஷ் ரமேஷின் கழுத்தானுங்கயிறை லாவகமாக இழுத்து இழுத்து மனுஷ வண்டியை ஓர் ஓவியத்துள் இருந்து வெளியே எடுப்பது போல நகர்த்திக் கொண்டிருந்தது.

வண்டி சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்த... சாலையோரம் மேய்ந்து கொண்டிருந்த எருமை இனியராஜன்... "என்ன பங்காளி.. இன்னைக்குமா பஞ்சாயத்து... உன்காட்டுல எப்பவும் மழைதான்யா" என்று பேசிக்கொண்டே வாயை படக்கென்று மேல் நோக்கி வளைத்து ஒரு சிரிப்பு சிரித்தது.

"அயோ..... ராமா..... காலைலயே இவன் மூஞ்சீலயா முழிச்சோம்...." முனகிய ராஜ மார்த்தாண்டன் கண்டும் காணாமல் தலையை கீழே சரித்துக் கொண்டது.

"அதெல்லாம் இருக்கட்டும். எப்ப தான் நீ உருப்பட போறயோ. இப்டியே ரோடு மேய்ஞ்சுகிட்டு திரி. அப்புறம் இந்த மனுஷ பயலுங்க... எருமை மாட்டு மேல மழை பேஞ்ச மாதிரின்னு சொலவடை உருவாக்காம என்ன பண்ணுவானுங்க... சரி சரி... வீட்டுக்கு போ.... அம்மா வர சொல்லுச்சு....வெது வெதுன்னு கழுநீர் ஊத்தி வெச்சிருக்கு... போய் குடிச்சு உன் அண்டா வயித்த ரொப்பிக்கொ.."

பேசிக் கொண்டே வண்டி தொடர்ந்து முன்னேறியது. மூச்சு முட்ட சுரேசும் ரமேசும்

வண்டியை இழுத்துக் கொண்டிருந்தார்கள்.

"போடா....போடா.... பெரிய பஞ்சாயத்து தலைவராகிட்டான்னு ஓவர் சீன். உன்னைய கட்டி போட்டு வளர்த்தப்பவே ஊர் மேஞ்சவன்டா நான்.....என்கிட்ட....உடான்ஸ் விடாத.. " -சக்ரவர்த்தி போன திசையை பார்த்து "த்துரூ.." என்று துப்பி விட்டு மீண்டும் ரோடு மேயலை தொடர்ந்தது எருமை இனிய ராஜன்.

ரோட்டிலிருந்து உள்ளே தள்ளி பக்கவாட்டில் இருந்த நிலத்தில் ரெண்டு ரெண்டு மனிதர்களாக கழுத்தை வளைத்து குனிந்து கொண்டே உழுது கொண்டிருக்க... பின்னால் கலப்பையில் ஏறி நின்று வேலை வாங்கிக் கொண்டிருந்தன மாடன்களும் ஆடன்களும்.

"மே.....ம்மே....அப்டித்தான் அப்டித்தான்.... இன்னும் வேகம் இன்னும் வேகம்...."என்று கத்தி கத்தி உற்சாகம் ஊட்டிக் கொண்டிருந்தன ஆடுகள்.

"ஆட்டுக்கு வால அளந்து வெச்சானா கடவுளு... உங்களுக்கு அது கூட இல்லையேடா... என் டுபுக்க்ஸ்...." என்று சொல்லி முன்னங்கால்களைத் தூக்கி சிரித்த ஆட்டின் தலையில் ஒரு தட்டு தட்டி "வேலைய பாரு...நண்பா " என்றது.....கூட வேலை வாங்கிக் கொண்டிருந்த மாடன்.

'பரவாயில்ல வேலை நல்லா நடக்குது...." மார்த்தாண்டனிடம் பேசிக் கொண்டே சக்ரவர்த்தி வண்டியை "ஹாய் ஹாய்... ஹோ..." என்று விட....

"அண்ணா வண்டிய நிறுத்துங்க..." ராஜமார்த்தாண்டன் கத்தினான்.

கழுத்துணாங்கயிறை எகிறி இழுத்துப் பிடிக்க... சடன் பிரேக் போட்ட மாதிரி வண்டி கச்சிதமாக நிற்க..... கோழி குந்தாணிச்சி ஓடி வந்து மூச்சிரைக்க நின்று கழுத்து சாய்ந்து பார்த்தது.

"ஏய் இவளே... என்னவ..... இப்பிடி இறக்கை உதிர ஓடி வர்றவ,.....!" மிதுன் கண்களில் படக்கென்று வந்து போனதொரு நாள்பட்ட கிறக்கம்.

"இல்... ல....டவுன்க்கு தான போறீக... சோளம் தின்னு தின்னு நாக்கு செத்து போச்சு... கொஞ்சம்.. குர்குரு வாங்கிட்டு வாங்க... " மூச்சு வாங்க... பேச்சும் வாங்க...ஒற்றை காலை மண்ணில் போட்டு கிறுக்கியது.

முதல் மரியாதை சிவாஜி மாதிரி வீங்கிய முகத்தோடு பார்த்து விட்டு.."சரி சரி காலை உடைச்சுக்காத..... இருக்கறதே குச்சி காலு.... அதையும் உடைச்சிகிட்டா உங்க ஆத்தாகிட்ட யாரு கொத்து வாங்கறது... போக்கத்தவ... போ போ....வாங்கிட்டு வரேன்...." என்றபடியே வண்டி கிளம்ப...அதே நேரம்... சற்று முன்னால் சாலையில் குறுக்கே புகுந்த பாம்பு வளம்பன்... "மிஸ்ட்டர் சக்கரவதி... கொஞ்சம் வெயிட் பண்ணுங்க.. ரோட் கிராஷ் பண்ணிக்கறேன்... இந்த மனுஷபயக தான் நம்மள பார்த்ததுமே... என்னமோ இவுனுங்கள கொல்ல வந்த மாதிரி... எங்களுக்கு வேற வேலையே இல்லாத மாதிரி.....கொஞ்சம் கூட யோசிக்காம வண்டிய மேல ஏத்தி... கத்தி கூப்பாடு போட்டு மிச்ச மீதி இருக்கற உயிரை அடிச்சே கொன்னு... .அப்புறம் மண்ணுக்குள்ள பால வேற ஊத்துவானுங்க.... வர்ற கோவத்துக்கு வந்து ஓங்கி ஒரு கொத்து விடனும் போல இருக்கு....." முனங்கி கொண்டே சாலையில் நெளிந்து நெளிந்து கடக்க...

"என்ன வளம்பா..... நீனி ஓவர் போல... கழுத்து வரை அடிச்சு தூக்கிருக்க... தொப்பை வந்துருமயா.. பாத்துக்கோ...அப்புறம் இப்டி இப்டி ஸ்டைலா ஊருக்கு ஊருக்கு போய் நெளிய முடியாது... ஹா அஹ்ஹா...." மேல் எகிறு தெரிய சிரித்த சக்ரவர்த்தி கொம்பை வாலால் தடவிக் கொண்டது.

ஊர்வதை நிறுத்தி தலை தூக்கி பார்த்த வளம்பன்... கடுப்பில் ஸ்ஸ்ஸ் என மூச்சு விட்டது.

" வாயை குறை. ஓயாம செத்த கிழட்டு மூதேவிங்க மாறி பேசிட்டே இருக்காத. பாம்புனா ஒரு கெத்து இருக்கியா.. அதை மெயிண்டெயின் பண்ணு.. " சக்ரவர்த்தி பேச பேசவே இடைமறித்த பாம்பு வளம்பன்...."சரி சரி.....உடனே அட்வய்ஸ் பண்ண ஓடி வராத... மூடிட்டு போ. ஊருக்கே பன்னாட்டன்னு நினைப்பு..." என்று சொல்லி விட்டு... "ஒரு நாளைக்கு மூக்குலயே போடறேன் பாரு..." என்று முனகிக் கொண்டே சோளக்கட்டுக்குள் ஊர்ந்து மறைந்தது .

"ஐயோ அண்ணே... இவன கண்டாவே எனக்கு காண்டாகுது.. அரசியல் மொள்ளமாரித்தனம் நிறைய பண்ணுவாண்ணா. வண்டிய எடுங்க..." முனகிய ராஜ மார்த்தாண்டனை பார்த்து..."பாம்பன் குசும்பன்... அவனுக்கு அவனே ஆப்பு வெச்சுக்குவான். இல்லனா அவன் கூட்டத்துலயே ஆப்பு வைப்பானுங்க... அவன் கூட்டத்துக்கு அறிவே இல்ல மார்த்தாண்டா... லூசுல விடு.." பெரிய தலையை பெருந்தன்மையாக ஆட்டிக் கொண்டே வண்டியை முடுக்கியது மிதுன் சக்ரவர்த்தி.

எங்கிருந்தோ வேகமாய் வந்த பறவை ஒன்று பட்டென்று ரமேஷ் தலையில் ஒரு கொத்து.... சுரேஷ் தலையில் ஒரு துப்பு. அதே வேகத்தில் மேலெழுந்து சக்ரவர்த்தியின்

தலையில் அமர்ந்து வாங்கியது பெருமூச்சு.

"ஏய்..... என்ன பண்ணிட்டு இருக்க... அதுங்களே.... பாவம்.. முடியாம வண்டியை இழுத்துகிட்டுருக்குதுங்க... அதுங்கள போய்..." உரிமையோடு கோபித்துக் கொண்டது சக்ரவர்த்தி.

"யாரு பாவம்.. இதுங்களா... அக்கட்டால போ நீ... உனக்கு ஞாபக மறதி ஜாஸ்தி சக்ரா. இந்த பயலுங்கதான் குளத்தை... கிணத்தை... வாய்க்கால.... ஆத்தை.... எல்லாத்தையும் காலி செஞ்சவனுங்க. ஒரு சொட்டு தண்ணிக்கு ஊர் ஊரா ரெக்கய தொங்க போட்டுகிட்டு அலையறதுங்களுக்கு தான் தெரியும் மூக்கு தள்ளறது. உனக்கென்ன ஜம்முனு ஊருக்குள்ள நாட்டாமை பண்ணிட்டு திரியற. படுபாவிங்க.... உக்காந்து இளைப்பாற... கூடு கட்ட.... .குஞ்சு பொறிக்க... ஒரு மரம் விட்டு வைக்கல... எல்லாத்தையும் வெட்டி ரோடு போடறானுங்களாம்... வெங்காய ரோடு..." எட்டி உதைக்க ஒற்றை காலை தூக்கி தூக்கி சுரேஷ் பக்கம் நீட்டியது பறவை.

" சரி சரி விடு ஆத்தா.. நீ வீட்டுக்கு போ.. முன்னாலயே தொட்டி நிறைய தண்ணி இருக்கு.....உன் ஆளுங்களல்லாம் கூட்டிட்டு போய் குடிச்சு குளிச்சு கும்மாளம் போடு.... நான் சாய்ந்தரம் வந்தர்றேன்... பேசிக்குவோம்..." - கொம்பை காற்றில் நீவிக் கொண்டே கரு கரு வாய் தோலை தூக்கி சிரித்து வழி அனுப்பியது சக்ரவர்த்தி.

"ம்க்கும்...இன்னும் எத்தனை காலத்துக்கு கேன் தண்ணிய வாங்கி ரொப்பி வைப்பீங்கன்னு பாக்கறேன்...." முணங்கிக் கொண்டே வானத்தில் விமானம் ஆனது பறவை.

சிறுவர்களின் நாடக திரை இடைவேளைக்கு மூடியது. பார்த்துக் கொண்டிருந்த மனிதர்கள் அமைதியாய் மூடிய திரையையே வெறித்தார்கள்.

சீமாட்டி ஒருத்தி மடியில் அமர்ந்திருந்த நாய்க்குட்டி துள்ளி துள்ளி எதுவோ பேச முயற்சித்துக் கொண்டிருந்தது.

- கவிஜி

# எங்கெங்கெனினும் குயிலோசை

கானகத்தை விரித்து
தலைசாய்க்கிறது
மரப்பொந்தில் குயிலினங்கள்
கூட்டுக்குடும்பமாய்...!

கொட்டிய வெயிலில்
சிந்தும் நிழலோடு
கொண்டுசேர்க்கிறது
குயிலொன்று மெல்லிசையை

கரையோரம்
நீராடிய குயிலொன்று
உதிரும்சருகோடு இசையை
தட்டியெழுப்பி
உதிர்த்து விளையாடியது

பூவிதழில் சேர்ந்த
குயிலொன்று
இதழில் விழுந்த
ஓசையை
பூவிதழோடு சேர்த்தே
விரித்தாடியது

மாலைக்கதிர் சாய
மங்கிய ஒளியில்
மயங்கிய குயிலொன்று
அலறும் ஓசையில்
சிறகை விரித்தபடி
கூடடைகிறது

இரவெல்லாம்
கதறிய குயிலொன்று
காலைக்கதிரோடு
ஈன்றெடுத்தது
இளங்குயிலொன்றை...!

கிளையமர்ந்த குயிலொன்று
கொட்டிய காற்றோடு
மரத்தையே
அசைத்து அசைத்து
இசைக்கிறது தன்வாய்திறந்து

வீட்டின் சுவரோரம்
அமர்ந்த இணை குயில்கள்
காதல் பேசி
நீவி விடுகிறது
நீளும் இசையை...!

பாரதியின் பாட்டிலமர்ந்த
குயிலொன்று
இன்றும் இசைத்தவாறே
நனைக்கிறது அனைவரின்
இதயத்தை.....!

## 2. இருண்டமேகம்

வானுறையும் வீதிக்குள்
வாள்வீச்சு...
மின்னல் கொடியை
விண்ணில் தெறிக்கவிட்ட
நிசப்தங்கள்...

விண்ணில் விழுந்த
குண்டுகளின் முழக்கம்
மண்ணிலும் விழுந்து
அச்சப்படுத்தியது...

கொடியில் காய்ந்த
துணிகள் அவசரமாய்
கிழிறக்கப்படுகிறது...

வீதியில் உருண்ட
சிறார்கள் வீட்டிற்குள்
இழுக்கப்படுகிறார்கள்...

ஆர்ப்பரிக்கும் அலைகள்
சொல்வதறியாது
முட்டித்தள்ளியது
நிற்கும் பாறையை...

காத்திருப்பில் நின்ற
காதலர்களின் சந்திப்பு
கலைந்து செல்கிறது...

அசையும் கிளைகள்
இலைகளைவிரித்து
தலைவிரித்தாடுகிறது
காற்றோடு சேர்ந்தே...

ஏணிகள் சாத்தி
வைக்கப்பட்ட
நீலவான மேகத்தில்
கருப்புசாயம் பூசப்படுகிறது

தூரத்தில் உலவிய
சிலிர்க்கும் காற்று
இழுத்துச் செல்கிறது
இருள் சூழ்ந்த மேகத்தை..

மண்ணை நெருங்கிய
கருப்பு பூதம்
சூரசம்ஹாரம்
செய்யப்படுகிறது....

## 3. வளைந்துகொடு

சுழன்றாடிய காற்றும்
அலையோடு அமர்ந்தே
கரை தொடுகிறது
சுகமான மெல்லிய பாதங்களை
வருடிக்கொண்டு...

குரலுக்குள் ஒளிந்த
இசையை
கிளைக்குள் ஒளிந்தே
வீசுகிறது
மாலைநேரக்குயிலொன்று..

அடர்ந்த வனத்தில்
அமர்ந்த இருளும்
தொலைந்து போகிறது
காலைநேர வெளிச்சத்தில்...

நிமிர்ந்த மலையும்
மேகக்கூட்டிற்குள்
கணப்பொழுதில்
மறைந்துபோகிறது...

கலைந்த கனவிற்குள்
ஆயிரம் ஆசைகளும்
உறைந்து போகிறது
உயிரை நனைத்தவாறு...

நிமிர்ந்த மரங்களை
தலைகோதிய காற்றும்
கிளைகளை கீழிறக்கி
உடல்சிணுங்கிநாணுகிறது
நிழலை விரித்துக்கொண்டே..

இருள் அப்பிய

மேகக்கூட்டிற்குள்
உடைந்த இருள்கூட்டை
சரிசெய்து நுழையும்
நட்சத்திர ஒளிக்கற்றை
வீழ்ந்து கிடக்கிறது
நிலவின் காலடியில்
மின்னொளியாய்....

நறுமணங்களை
பூசிக்கொண்டு
கால்களற்ற உடலோடு
இதழ்விரித்து மொழி பேச
காற்றின் திசையறிந்து
காத்திருக்கிறது
தொட்டிச்செடியில்
பிரசவித்த பூக்கள்....

மர நிழலுக்குள் கிடக்கும்
கிளையமர்ந்த பறவை
கொத்திய பழங்களை
வீசுகிறது....
நிழலில் இரை தேடிய
உயிருக்கு....

மேகம் சுமந்த நீரை
முகந்துகொண்டு
ஓசையோடு ஒலி யெழுப்பி
அருவியாய - கீழிறங்கும்
உன்னுடலை தழுவ காத்திருக்கிறது
ஆயிரம் உடல்கள்..

எடைக்கற்களை
சுமக்கும் தராசுகள்
முட்களை நகர்த்தியே
நிலையாகிறது
தட்டுகள்சமநிலை
அடையும்வரை...

பாதங்களை நோகவிட்டு
சுவடுகளை பிரதிபலித்து
பாதைகளை விரித்து
விடுகின்றன
விலாசம் தேடும்
பாதங்களுக்கு...

இதழ்கள் கிழிந்து
உதிர்ந்து கிடக்கும்
செடியருகே
பூத்திருக்க காத்திருக்கின்றன
ஆயிரம் மலர்கள்
விதைகளைஉடைத்து
வெளியேற.....
வளைந்துகொடு
நிமிரும் சமுதாயம்
உனக்கு முன்னால்.....

## 4. சொல்வாயா?

கொல்லும்விழி பார்வையிலே
மென்நடையின் ஓசையிலே
புன்னகையின் வாசத்திலே
ஏந்திவந்தேன் பூ மகளே..!

கட்டிவைத்த முத்தங்களை
கட்டவிழ்த்து உறவாடி
மென்பஞ்சு கன்னத்திலே
இட்டு வைத்தேன்பொன்மகளே..!

ஆற்றுவழி பாதையிலே
ஆலோலம் பாட்டினிலே
நீ நடந்து போகையிலே
கால்கொலுசாய் சிரித்தவளே..!

பூமரங்கள் பூத்திருக்க
காத்திருந்த வெற்றிடத்தில்
வாசங்களும் சேர்ந்திருக்க
தாமதமாய் வந்தவளே...!

பூவிதழின் முத்தங்கள்
நாரோடு சேர்ந்திருக்க
நான்தொடுத்த பூவிதழை
நாராயிடம் தந்தவளே....!

நிலவொளியும் மின்னுது
என்னுள்ளம் பறக்குது
இரவெல்லாம் தவிக்குது
கனவொன்று கூடுது...!

ஆற்றினிலே
மணல்மேட்டினிலே
அலையடிக்கும் பொழுதினிலே
அமர்ந்திருக்கும் கயல்விழியே..!

காதலொன்று சொல்வாயோ?
காக்கவைத்தே செல்வாயோ?
புன்முறுவல் தருவாயோ?
நிமிடந்தனை வெல்வாயோ...?

மொட்டவிழ்த்த பூவிதழாய்
முகமலர்ந்து நிற்பாயோ
உதிர்கின்ற பூக்களாய்
எனைஉதிர்த்து கடவாயோ?

என்னென்று நானுரைப்பேன்
என்னுள்ளே நீயென்பேன்
கண்மூடி காத்திருப்பேன்
கவிதையாய் பூத்திருப்பேன்..!

## 5. துளிப்பாக்கள்

கலைந்து போனது
காற்றோடு கொஞ்சல்
கூடிய மேகங்கள்

தாமதிக்கும் மழை
ஆர்ப்பரிக்கும் அலை
தத்தளிக்கும் உலை

வீழ்கின்ற மழைத்துளியை
அலகால் கொத்தியது
கிளையில் நடுங்கும் பறவை

அள்ளிய குப்பையில்
அமர்ந்து செல்கிறார்
குப்பைத் தொழிலாளி

சரிந்த மூங்கில்
சிரித்து ஒலிக்கிறது
புல்லாங்குழல்

புத்தகம் பிடித்த கைகள்
முழம் அளக்கிறது
பூ விற்கிறாள் சிறுமி..

அரசமரத்தில்
இடம் வாங்கியது
ஊர்சுற்றிய பறவைகள்...

ஏழையின் வீட்டில்
குதித்து விளையாடுகிறது
பசி

கல்லடி வாங்கியதும்
சிரிக்கிறது
குளத்திற்குள் நிலவு

அங்காடி கடை முன்
சாரைசாரையாய் எறும்புகள்
வந்திறங்கும் சர்க்கரை மூடை

விவசாயி நிலத்தில்
நடப்பட்ட விளம்பர பலகை
இடம் விற்பனைக்கு...

வறண்ட நாக்கில்
விரிந்த கோடுகள்
வடிந்த குளம்

வெட்டிய கோடரி
அடக்கம் செய்யப்பட்டது
அழுதுவீழும் மரங்கள்

சம்பாதிக்கும் முதலாளி
படுகொலையில் ஆறு
மணல் திருட்டு

இறுதி நடனம்
உயிர் பறித்த காற்று
அணையும் விளக்கு

அலையைத்தேடி
அயர்ந்து போகிறது
தொட்டி மீன்கள்

தொட்டிச் செடியில்
புதிய வரவு
பறவையின் எச்சங்கள்

வறுமையோடு
எரிந்து கொண்டிருக்கிறது
பசியில் குடிசை

விழியில் விழுந்த பனித்துளி
அழுதது
ஒளியற்றவரிடம்

உச்சிவெயில்
சிதறும் நிழல்
உதிரும் பூக்கள்

திருவிழாவில்சலசலப்பு
தலை துண்டிப்பு
வேண்டுதல் ஆடுகள்

–

ஞா.முனிராஜ்,
அருப்புக்கோட்டை

# என் சிறு வரிகள்

விரும்பியதை செய்யும் போது விருப்பமில்லா
நிகழ்கவுகளும்
என்னை சூழும்
மதியினில் மயக்கம் என்னவோ
மனதில் வரும் குழப்பம் என்னவோ
தீர்வு கண்டு தேர்வு செய்ய
நாட்கள் என்னவோ
காலம் கடந்த பின்னே
விருப்பமது என் அருகில்
வரதுதென்னவோ!

கண் மூடி காணும்
கனவாகிய யாவும்
கண் விழிக்கவே
காணமல் போகிறது
வாழ்க்கையை போல!

தினசரி நாளிதழ்களிலே
புதிய செய்திகள் பிறக்கிறது
நேற்று நான் படிக்க மறந்த
நாளிதழின் செய்திகள்
எனக்கு இன்று புதியனவே!

–
கனிமொழி சீனிவாசன்

# பேட்டைகளைத் துரத்தித் துரத்தி

தனது ஆண்மையை
நிரூபித்துக் கொண்டிருக்கும்
சேவலை வளைத்துப் பிடிக்கிறேன்.
இதுவரையில் வராத விருந்தாளி
வந்திருக்கிறார் வீட்டுக்கு.

/
என்னைத் தொலைத்த
நீயே என்னிடம்
என்னைத் தேடித் தா.

/
அறியாத வயதில்
தெரியாமல் செய்த
தவறுக்கு மன்னிப்புண்டு.
அறியும் வயதில்
தெரியாமல் செய்த
தவறுக்கு தண்டனை
நிச்சயம்.

/
சிறுகச் சிறுகச்
சேமிக்கிறேன் காதலை.
என்றாவது ஓர்நாள்
மொத்தமாய்க் கேட்பாயென்ற
நம்பிக்கையில் !

/
இன்று வந்திருப்பதும்
நாளை வரப்போவதும்
நேற்றிலிருந்து வந்தவனுக்குத்
தெரிய வாய்ப்பில்லை.

/
நிழலின்
கனவு கொண்டு
எதுவும் செய்யவியலாது.

/
நீ உள்நுழைந்த கணம்
நந்தவனமாகிறது
என் வீடு.

/
கொத்து வேப்பிலைக்கு
ஊரெல்லாம் அலைந்தேன்
அம்மன் கோவிலில்
இருப்பது நினைவில் வர
அங்கு ஓடினேன்.
அகிலத்தைக் காக்கின்ற
அம்மனுக்கு மதிற்சுவரெழுப்ப
ஊர் நிர்வாகம்
சென்ற வாரம்தான் வேரோடு
வெட்டியெறிந்ததாம்
மரத்தை…!

/
காற்றின்
அனுமதியின்றி நகர்வதில்லை
ஒலிக்கலவைகள்.

/
என் மனம் நோகக்கூடாது
என்பதற்காக நிறைவாய்
இருப்பதாய்ச் சொல்கிறாய்.
அதிலிருக்கும் குறைகள்
எனக்குத் தெரியும்.
/
அவள் நடந்து வருகையில்
ஆயுதம் ஏந்தாத

அம்மனாய்த் தெரிகிறது
எனக்கு.
/
எங்களூரில்
வருடந்தோறும் பாண்டவர்களின்
சிறப்பினைப் போற்றும்
மகாபாரத சொற்பொழிவு.
புதுப்பித்துக் கொண்டிருக்கிறது
பங்காளிச் சண்டையை...!

/
நானும் நீயும் பார்த்த
பருவமழைகள் ஏராளம்.
பலமுறை தவறி
நனைந்திருப்போம்.
விரல் விட்டுச்சொல்லும்
எண்ணிக்கையளவே
விரும்பி நனைந்தது.

/
கனவில் அத்துமீறி
நுழைந்து விட்டாய்
விடுதலைக்கு
விடியும் வரை காத்திரு!

/
அவள்
சொன்னதைச் செய்தேன்.
அவர்கள்
செய்ததைக் கேட்டார்கள்
சொன்னேன்.
அவள்
சொன்னாது குற்றமா...?
நான்
செய்தது குற்றமா?
தற்போது
குற்றவாளி கூண்டில்
நான் மட்டும்.

/
ஊர் நாற்றத்தைப்
பொருக்க முடியாமல்
நாசியைப் பொத்துகிறேன்.
என் நாற்றம் கமுக்கமாகப்
புழுங்குகிறது என்னில்.

/
மொத்தமாய்ப் பார்ப்பதில்
இல்லை சுவாரஸ்யம்.
சிறுகச்சிறுகப் காண்பதே
அலாதி ருசி...!

/
இன்று
எழுதவேண்டியதை
நேற்றே எழுதிவிட
நாளை
எழுத நினைத்ததை
இன்று எழுதிய பின்பு
நாளைக்கு
நாளையின் நாளையதையே
எழுதவேண்டும்.

/
என்னை எரித்து
என் மாமிசத்தை நானே
தின்று ஜீரணித்ததும்
ஜெனிக்கிறது ஒருகவிதை...!

/
கோடையின் வெம்மை
தணிக்கும் ஓடும்நதியில்
மரத்தின் நிழல்.

/
நிறங்களின்
ஆதி கருப்பும் வெள்ளையும்
சாயங்களின் கிடங்கு பூக்கள்.

/
பார்வையின் தீட்சண்யத்தை
மொத்தமாய்க் குடிக்கிறது
கலர்க்கண்ணாடி.

/
ஏன்...?
எதற்கு...?
இம்மாபெரும் தண்டனை.
நின்று கொண்டே
அருள்பாலிக்கும்படி...
யாரிட்டார்
கடவுளுக்குச் சாபம்.

/
ஆரவாரத்தோடு
விடிகிறது காலை.
தனிமையின்
வெறுமையை உடைத்தெரியும்
அடையாளத்தில் கூவுகிறது.
வழிதவறிய
ஒற்றைக்கருங்குயில்...

/
மண்ணில் புதையும் வரை
தெரிவதில்லை
விதையின் பிரமாண்டம்.

/
கிளையாடும்
ஆட்டத்திற்கு இசைகிறது.
பழம் கொத்த வந்த கிளிகள்.

/
பள்ளம்
பார்த்தே பயணிக்கிறேன்
தடுக்கிறது எதிர்க்காற்று.
திரும்பும் திசையின் பாதை
நெடுக்கிலும் முட்டி நிற்கிறது
மேடுகள்.

/
வனத்தில்
உண்டுகளித்த பறவைகள்
ஊருக்குள் திரும்பியதும்
விதைகள் போட்டன
எச்சமாய்.

/
நிர்வாணத்தை நிர்வாணமாய்
தேடித் திரிகிறான்
பித்தன்...!

/
வரைந்த மரத்தில்
வந்தமர்ந்த கிளி
தேடுகிறது கனியை!

/
உருவம் முதற்கொண்டு
உடையும் நகையும் கூட
கறுப்பாய் இருக்கிறது
கரித்துண்டில் வரைந்த சாமி.

/
ஒரு கன்னத்தில் கொடுத்தாய்
மறுகன்னத்தையும் காட்டுகிறேன்
மறுக்காமல் கொடுத்துவிடு
அதற்கும் ஒரு முத்தம்.

/
எரிக்கச் சொல்லவில்லை
புதைக்கவும் கோரிக்கை
வைக்கவில்லை.
எனினும் மயானத்தில்
எரிகிறது புதைப்படுகிறது
பிணம்.

/
உடன் வர
விருப்பமுள்ளவர்கள்
கரம் உயர்த்துங்கள்.
நாளை இரவு நிலவை
திருப்பி வைக்கப் போகிறேன்.

/
பாதையில்லா வெட்டவெளி
வானம்; சரியாய்க் கூடுதிரும்பும்
பறவைகள்.
/
குளத்தில் பிடித்த மீனை
நதியில் போட்டது கொக்கு.
வறண்ட நதியில்
வறுபட்டதும்
வறுத்த மீனைத் தின்று
ஏப்பம் எழுப்பியது கொக்கு.

/
ரெட்டைக்கால் மனிதா
ஒற்றைக்கால் மரத்தை
வெட்டாதே.
அது ஒற்றைக்காலில்
நிற்கவில்லை.
உனக்காகத் தவமிருக்கிறது.

/
அந்திவேளை
பச்சோந்தியாய் நிறம் மாறுகிறது
மேற்கில் வானம்.

/
நாளை
என் இல்லத்திற்கு
காதலி வருவதால்
சிறப்பு விருந்தினராக
வண்ணத்துப் பூச்சிகளை
அழைத்திருக்கிறேன்.
என் வீட்டிலின்றே
ஒட்டடையடித்து விரட்டுகிறேன்
சிலந்திகளையும் பல்லிகளையும்...!

/
என் உயிர்ப் பிரிந்ததும்
உடலை எரிப்பீர்களோ
புதைப்பீர்களோ
அது உங்களின் விருப்பம்.
என் ஆவியை மட்டும்
அவளிடம்
கொடுத்து விடுங்கள்.
சவமான பின்பும் கூட
அவளின் மரணத்தைக்
காணலாகாது என்னால்.

--
பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



# சாய்ந்திருப்பதெல்லாம் மாயத்தோள்கள்

தொட்டிலுக்குப் பதிலாக
நான் உறங்கிய படுக்கை,
என் தாயின் தோள்;
ஆறுதலாக கட்டித் தழுவியது,
என் தந்தையின் தோள்!

பெற்றோரிடம் கூறாமுடியா
சொற்களை பெற்றுக்கொண்டது,
என் சகோதர சகோதரியின் தோள்;
இரத்த சொந்தம் இல்லாவிட்டாலும்
நெஞ்சம் நிறைய தஞ்சமளித்தது,
நண்பரின் அன்புத் தோள்!!

தன் உடலெனும் கட்டிலில்
என்னை சுமந்த தலையணை,
என் காதலியின் தோள்;
வாழ்க்கை முழுவதும்
குடும்ப வருத்தங்களை சுமக்கிறது,
என் மனைவியின் தோள்!!!
வரும் மரணத்தின் தோளுக்கு முன்பு
நான் சாய்ந்திருப்பதெல்லாம்,
வெறும் மாயத்தோள்கள்.

–

## வெ.ஹேமந்த் குமார்,

ஈரோடு



# வளைந்த மரம்...!

இலைகளையெல்லாம்
உதிர்த்துக்கொண்டு நின்ற
மரம் -ஒன்று.
வளைந்து சென்று.
சாலை மார்க்கமாக
வருவோர் - செல்வோர் என
அனைவரையும்
வாழ்த்தி அனுப்பிக்கொண்டே
இருக்கின்றது...!

"அனுதினமும்...!"

## - அ. செல்வராஜ்,

க. நா. ஊர்.
உடுமலைப்பேட்டை.

# பாதியில் தவறவிட்ட கவிதை

தொண்டையில் சிக்கிய மீன் முள்ளாய் உறுத்துகிறது அது.

இம்சிப்பதை எடுத்தெறிய நினைக்கும்
என் பகீரதப் பிரயத்தனங்கள்
பயனற்றுப் போகிறது.

முனை மழுங்கிக் கிடக்கும் முயற்சிகளை உருண்டையாக்கி
விழுங்கித் தொலைக்கிறேன்...

ஆனாலும் அது
புறாக் காலில்
சிக்கிய
முகக் கவசமாய் பின்தொடர்கிறது...

ஒரு இரயில் பயணத்தில்,
ஒரு கோப்பைத் தேநீர் உறிஞ்சுகையில்,
ஒரு சாலைத் திருப்பத்தில்

எதிர்பாரா தருணங்களில்
நகைக்கும் அதனை
விரலிடுக்கில்
தேடுகிறேன்
விண்ணோக்கிப் பறக்கிறது அது.

–
இனியவன் காளிதாஸ்



# இறை நம்பிக்கை

இறைவன் மீது நம்பிக்கை வை
இறையுங்கள் நம்பிக்கை மெய்

உன் பலத்தை அறியவது நம்பிக்கை
மற்றவர்கள் நம்பிக்கை பெறுவது

நான் யார் என அறிவது மெய்ஞானம்
எப்படி என ஆராய்வது விஞ்ஞானம்

இறையை தேடி போக வேண்டாம்
ஏழைக்கு உணவிடு
கல்வி உதவி செயதிடு

பெற்று வளர்ந்த பெற்றோர்
கல்வி தந்த ஆசான்

கண்ணிழந்தோருக்கு கை கோல்
முதியோருக்கு ஊன்று கோல்

விபத்தில்.. நோயாளிக்கு இரத்த தானம் உதவினால்
இறை உன்னை தேடி வரும்

கொரோனா உண்டியல் நிதி தந்த குழந்தைகள்
போராடி காப்பாற்றிய மருத்துவர்கள்

தாய்மொழியை கடவுளாக வணங்கு
நாட்டை உயர்ந்த பாடுபடு

கேட்காமல் உதவுபவன் கடவுள்
சிரமத்தை பகிர்பவன் இறைவன்

– எஸ்.வீ. ராகவன்,
சென்னை

# 1. தூக்கி வீசும் பொருட்கள்

கற்களாய் இருந்தாலும்
ஏமாற்றுவதாக இருந்தாலும்
அருகில் வந்து முகர்ந்து பார்க்கிறது
பசி நாய்கள்
மிச்ச உணவாக இருந்தாலும்
வெறும் சமிக்ஞையாக இருந்தாலும்
அழைத்தவனை வாஞ்சையோடு
வால் ஆட்டி மதிப்பளித்து
கடக்கும் இந்த நாய்களிடம்
இன்றுவரை
தோற்றுக்கொண்டேயிருக்கிறார்கள்
மனிதர்கள்.

----

2. பாணன் ஒருவன் பெரும் பாடலை
பாடினான்
பாடலில் ஒவ்வொரு புடவைக்கும்
ஒரு கதைகளைச் சொல்லிப்
பாடிக்கொண்டே
உலகம் முழுவதும் வலம் வந்தான்
ஒருவன் இடைமறித்து
எப்பொழுதுதான் இந்த சேலை பகுதி
முடிந்து
அடுத்த பகுதிக்குப் பாடல் செல்லும்
எனக்கேட்டான்
உடனே பாணன் போதை தெளிந்து
சொன்னான்
சூது விளையாடுவது
பெண்களை மோக பொருளாய்
பார்ப்பது எப்பொழுது விடப்படுகிறதோ
அப்பொழுது இந்தப் பாடல் முடியும்
என்றான்

அந்த கணம் உலகில் உள்ள அனைத்து
மூங்கிலும் பலத்த காற்றில்
துளையிட்டுக் கொண்டு
இசைக்கத்தொடங்கியது
பாணன் மீண்டும் ஒரு
புடவையைப்பற்றிப்
பாடத்தொடங்கினான்
மூங்கில் இசை சட்டென்று நின்று
போனது.

----

3. இன்றைய வருத்தமே
காதல் கடிதங்களை எழுதாமல்
காதலிப்பதுதான்
சரி கடிதம்தான் எழுதவில்லை
தின குறிப்பில்
உன் நினைவுகளை எழுதும்போது
சமையல் குறிப்பாய்
மாறிப்போனது நம் நினைவுகள்
சமைப்பதற்கு முதலில் நனைய
வேண்டும்
நனைந்தாயிற்று
தீயும் சுதி சேர்ந்தாயிற்று
பொறுங்கள்
சமையல்
சமையலறையில்லை...
சும்மா விடுவதாக
தெரியவில்லை இந்தக் காதல்.

----

4.தூக்கி வீசும் பொருட்கள்
கற்களாய் இருந்தாலும்
ஏமாற்றுவதாக இருந்தாலும்
அருகில் வந்து முகர்ந்து பார்க்கிறது
பசி நாய்கள்

மிச்ச உணவாக இருந்தாலும்
வெறும் சமிக்ஞையாக இருந்தாலும்
அழைத்தவனை வாஞ்சையோடு
வால் ஆட்டி மதிப்பளித்து
கடக்கும் இந்த நாய்களிடம்
இன்றுவரை
தோற்றுக்கொண்டேயிருக்கிறார்கள்
மனிதர்கள்.

----

5. பிள்ளையார் விளையாட்டு

முதல் உரிமையைப் பெற்று
மரணத்தை மனிதர்கள்
கைகளால் ஏற்கும்
இந்த தெய்வம்
அதீத பொறுமைதான்
கடலில் மரணித்து
மூன்றாம் நாள் உயிர்த்தெழாமல்
கடலாகவே மாறிப்போவது
பிள்ளையாரின் கருணை
வருடா வருடம்
புத்துயிர் பெற்று மரணிக்கக்
காத்திருக்கிறார் மனிதர்களைப்போல்.

----

6. கடவுளின் பிரார்த்தனை

அரவமற்ற சாயலில்
அமர்ந்து மிதக்கிறது கருவறை
காலத்தின் சூழலில் நனைந்து
தேய்கிறது கல்
கல்தசை செய்து
அறை அமர்த்தி
மனம் தொட்டு
அகம் பாராத ஸ்ருதி மொழிகள்
மொழியற்ற வெளியில்
நிர்வகித்து
சொர்க்கம் நரகம் எனத் தண்டனை
பிரிவுகளில் சங்கமிக்கிறது
கடவுளின் நீதிமன்றம்
வேதனை தளும்ப நீதி வழங்கும்
கடவுளின் குரல்கள் நடுங்கிற்று
தத்தளிக்கும் உயிர்களிடம்
மீள் பிரார்த்தனைகளைக் கொண்டு
சேர்த்து
சிறகு முளைத்து மீண்டெழுதும்
கணங்கள்
விதி என முழங்கப்பட்டது
வாழ்க்கை விளையாட்டுகளில்
பகுத்தறிந்து பேசப்பட்டது பாதி
மௌனம்
வாய்திறக்காத நீள் மௌனம்
நீண்டெழுதிக்கொண்டேயிருக்கிறது
தன் பிரார்த்தனைகளை
கடவுளின் அருகில்
பிரார்த்தனைகளோடு திறக்கப்படுகிறது
கதவு
புரிந்துகொள்ளாமலேயே திறந்த கதவு
மீண்டும் மூடப்படுகிறது.

----

7. உயிர் ஜீவித்து
பிரபஞ்சத்தில் ஸ்தாபிக்கிறது
நினைவுகள்
மண்ணில் மலர்ந்து
அணுக்களாய் மலர்கிறது
உயிர் தாதுகள்
மலர் மொக்கு பூத்து
மனிதனாய் விரிய விரிய
எல்லையற்று துளிர்க்கிறது

ஆகாயம்.

----

8.
புத்தரின் வருகையை எதிர்பார்த்து
உதிர்ந்துகொண்டேயிருக்கிறது
போதி இலைகள்.

----

9. நான் உனக்காக உயிர் பசி
உரைகல்லைக்
கொண்டுவந்திருக்கிறேன்என்னைத்
தீண்டிப் பார்த்துக்கொள்
நீ அனுமதித்தால் உன்னைத் தீண்ட
உதடு கொடு
முத்த இசைக்குத் திறந்த இரண்டு
உதடுகள் சுதி சேர்த்துக்கொண்டு
இருக்கிறது
ஆதி வனத்தில் எத்தனையோ பழங்கள்
எத்தனையோ நிறங்களில்
காத்திருக்கிறது தீண்டிச் சுவைத்திட
அதன் நிர்வாணத்தை
ரசித்துக்கொண்டிருக்கிறேன்
நான் உடம்பால் செய்யப்பட்டதை
நீ அடிக்கடி உணர்த்திவிடுகிறாய்
நாம் இன்னுமொரு உடலைச் செய்ய
வேண்டுமா மாயா
காமத்தால் மட்டுமே கடவுளை
அடையாளம் கண்டு கொள்ள முடியுமா
எனக்குள் சுரக்கும் நீரை என்
தலைக்குள் ஏற்றி சக்கரத்தில்
சேகரிப்பது என்பது உன்னையும்
சேர்த்துத்தான்
மெத்தை தீவில் கடவுள் பசி
வந்துவிட்டது
அடைதல் தான் இறுதி வரி
நான் உன்னை அடைந்துவிட்டேன்
இந்த நிமிடம் மனித விலங்கில்
அறுபட்டுப் போனது உடல்
மீண்டும் பசி எடுக்கும் முன்
என் அருகில் வராதே மாயா
என் தலைக்குள் பாரமாய்
இருக்கிறாய் நீ
ஒவ்வொரு புணர்தலிலும் விடுதலை
அடைந்துகொண்டேயிருக்கிறது
தேடலும் மீறலும்.

----

10. சபிக்கப்பட்ட மனிதர்களுக்கு
இன்றுவரை சாப விமோசனமே
கிடையாதா
சுயநலமில்லாத இந்த பக்தியில்
பூமியின் அச்சு சுழலாதா
நீ உறக்கத்திலேயே
இருந்துவிட்டால் எப்படி
பசி என்கிற தண்டனை
படி ஏற வைத்ததே
பிச்சை கேட்கும் யாசகனாய்
உன் முன் அவமானம்
உயிர் எனும் பிச்சையை
எதிர்க்களித்தாய்
என் யாசகத்தை ஒவ்வொரு முறையும்
மறுதலித்தாய்.

11. முன்னோர்களின் அடையாளம்

கடலுக்கும் நமக்கும்
அப்படி என்னதான் உறவு இருக்கிறது
இவ்வளவு கூட்டம்
கடலின் முன் கூடுகிறது
என்ற கேள்வி எழுப்பிய
என் மகனுக்குப் புரிந்து போனது

தன் தாத்தாவின்
அஸ்தியைத் தொடர்ந்து
பாட்டியின் அஸ்தியையும்
கரைத்தபோது சொன்னான்
கரைந்து போன எல்லோர் அஸ்தியும்
தன் உறவுகளை
அணைத்துக்கொள்ளவே

–
ப.தனஞ்ஜெயன்

---

# இறைவன் !

அகிலம் முதல் ஆகாயம்
வரை - இயங்குது
உன்னாலே...!!!!!!

ஆலயமும் கொண்டு
ஆட்சி புரிவாயே
உலகிலே...!!!!

இயற்கையை கொண்டு
எங்கும் பரவினாயே
ம(வி)ண்ணிலே...!!!!!

ஈர்ப்பினைக் கொண்டு
மக்களை கவர்ந்தாயே
உன்னிலே...!!!!!

உயிர்களை படைத்து
நல்வழிகளை தந்தாயே
மண்ணிலே...!!!!

ஊக்கம் தந்து
வலிகளை போக்குவாயே
என்னிலே...!!!!!

எழில் கொண்ட
உருவிலே - எல்லை
இல்லா ஆனந்தமே...!!!!

ஏராளம் காண்பேன்
ஏற்றமும் மாற்றமும்
உன்னால் வாழ்விலே...!!!

ஐயமில்லையே மனதில்
உன் கரம் பற்றிய
கணத்திலே...!!!!!

ஒன்பது கிரகமாகி
நீயே காக்கிறாய்
இவ்வுலகையே...!!!!!

ஓம் எனும் நாமமே
அதுவே போக்குது
கவலைகளையே...!!!!!!

--
ச.அருள் பிரசாத், B.com
CMA MDA DTL
(GST practitioner)
சிராங்குடி



# அன்பு நண்பனுக்கு மன்னிப்பாயா.....

உடைமை
என்னும் அர்த்தமற்ற ஆதிக்க அன்பிற்கு இரையாணது நட்பு என்னும் நட்சத்திரம்..

அர்த்தமற்ற புரிதல்கள்
ஆதிக்கமிக்க வார்த்தைகள்
மறைத்து தான் போனது
உள் உள்ள அன்பு நிறைந்த மனதை..

நட்புக்குள் புகைமையும் அகங்காரமும் கூடாது என்பது காலம் கடந்து
புரிந்து பயன் என்ன??

தன கூர் முனைகளும் குறைத்தே காயப்படுத்தி இருக்கும்
என் சொலென கூர் வார்த்தைகள் முன்..

என் செய்வேன் நான் என்ற அகங்காரம் ..
ஆட்சியேன்மை..

தனிமை பலவாறு வாட்டுகிறது நண்பா உன் துணை இன்றி..

வாழ்வில் பல ஏற்றங்கள் தாழ்சிகள் நீ இன்றி முதல் முறையாக...

தனிமையில் நாம் இணைந்து இருந்த நினைவுகள் பலவாறு மனதில் உதிக்க மனம் தேடும் உடன் உன்னை..

என் காயங்களும் ரணங்களும் நீ இன்றி இன்னும் ஆறாமல் உள்ளது நண்பா..

ஒன்றும் இன்றி மகிழ்வுடன்
நீ இருந்தாய் என்னுடன்..
இன்று எல்லாம் உண்டு
நீ இல்லை என்னுடன் ...
மகிழ்ச்சியும் தான்...

நண்பா ஆறுதல் தேடி அலைகின்றது மனம் ..
நீ இன்றி வெறுமையானது நாட்க்கள்..

என் மூட மனதிற்கு இது புரிய இவ்வளுவு காலம்..
என் செய்வது சிந்திக்க மறந்தவன் அல்லவா நான்...

நண்பா வாழ்கை இன்று பல பாடங்களை புகட்டி உள்ளது.
.அனுபவங்களை பகிர்ந்து கொள்ள
நீ வேண்டும் வா....

வெறுமை ஏமாற்றம், சூழ் இந்த வாழ்வு எதிர்கொள்ள கடினம் மாக உள்ளது..
நம்பிக்கை தர நீ வேண்டும் வா..

என் அக சூழலில் இருந்து மீண்டு கர்ஜிக்கும் சிங்கமாய் உன் துணை கொண்டு எழ விரும்புகின்றேன் .

தூக்கி விட பல ஏணிகள் இருந்தும் நம்பிக்கை மிக்க ஒரு கை இல்லை..

உன் கை இல்லை..

விழைகிறேன் விசும்பி
ஆறுதல் தருவாயா..
உன் மகன் போல் என்னை உணர்ந்த மன்னிப்பாயா...
நண்பா....

நட்புடன்
விருதை
கவிபாரதி. சதிஷ்

# தர்பூசணி



இளவரசி
இளங்கோவன்

ஆ! புத்துணர்ச்சியூட்டும் தர்பூசணியின் அற்புதமான சுவை. வாயில் எச்சில் ஊறுகிறது அல்லவா? உங்கள் வாயை நீராக்குகிறது அல்லவா?

சரி, நான் சில உதவிக்குறிப்புகளைச் சொல்ல உள்ளேன். அடுத்த முறை நீங்கள் கடைக்குச் செல்லும்போது, உங்களுக்கு நல்ல, பெரிய, சுவையான மற்றும் வாய் நீராடும் தர்பூசணி பழம் கிடைக்க நான் எனக்கு தெரிந்த சில பயனுள்ள குறிப்புகளை உங்களுக்காக இங்கே தருகிறேன். தயாராக உள்ளீர்களா? ஆனால் அந்த குறிப்புகளுக்கு செல்வதற்கு முன்பு, அதிகமாக நிரப்பப்பட்ட, செயற்கையாக வளர்ச்சி தூண்டப்பட்ட தர்பூசணி பற்றி நான் உங்களுக்கு ஒரு எச்சரிக்கை உதவிக்குறிப்பைக் கொடுக்கப் போகிறேன். இப்போது அதைப் பெறுவோம்!!

உங்கள் தர்பூசணியை திறந்து வெட்டும்போது ஒரு விரிசலைக் கண்டால், அதை சாப்பிடுவது பற்றி கூட யோசிக்க வேண்டாம்...

ஏன்?
ஏனென்றால், சில நேரங்களில் தர்பூசணிகளை பார்குளோர்பெனுரான் என்று அழைக்கப்படும் வளர்ச்சி இரசாயனத்தை அதிகமாக செலுத்துவதன் மூலம் வளர்ச்சி துரிதம் செய்கிறார்கள், அதனால் இயற்கைக்கு மீறிய வளர்ச்சியால் அது உள்ளுக்குள் திறந்திருக்கும். எப்படியிருந்தாலும் இதை சாப்பிட முடிவு செய்தால், உங்கள் உடலில் சில கடுமையான சேதங்களை நீங்கள் சந்திக்க நேரிடும், மேலும் வலிமிகுந்த வயிற்று வலியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்...

இப்போது நீங்கள் அதிலிருந்து ஒரு கடியையும் எடுக்க மாட்டீர்கள், இல்லையா? எப்போதும் நினைவில் கொள்ளுங்கள் இந்த எச்சரிக்கை உதவிக்குறிப்பை சரியா? வாருங்கள் சரியான தர்பூசணியைத் தேர்ந்தெடுப்பதற்கான 7 உதவிக்குறிப்புகளுக்கு செல்லலாம்...

ஒரு தர்பூசணியைத் தேர்ந்தெடுங்கள், அளவு சிறியதாக இருந்தாலும் கனமாக இருக்கும் பழத்தை தெரிவு செய்யுங்கள்.அது ஒரு பெண்ணாக இருந்தாலும் கூட. என்ன ஆச்சர்யமாக உள்ளதா?  தர்பூசணியில் ஆண், பெண் உள்ளதா? ஆம் தர்பூசணியில் ஆண், பெண் இருவகை இருக்கிறது என்பது உண்மை. ஆனால் ஆண் தர்பூசணிகள்

நீளமாக இருக்கும். பெண் தர்பூசணிகள் வட்டமாக அல்லது கொழுத்து காணப்படும்.

ஆனால் இதில் பெண் தர்பூசணி தான் மிகவும் இனிப்பாக இருக்கும்.

கரும்பச்சை நிறத்தில் மிகவும் இருண்ட நிழலைக் கொண்ட ஒன்றைத் தேர்வுசெய்க, அழகாக வெளிர் நிறமாக இருந்தால் அது ஆரோக்கியமான தர்பூசணி அல்ல.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் வெளியில் ஏதேனும் ஆரஞ்சு அல்லது மஞ்சள் நிறம் இருக்கிறதா என்று சோதிக்கவும். வெள்ளையாக இருந்தால் முழுமையாக பழுக்கவில்லை என்றும், மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறத்தில் இருந்தால் அது நன்கு பழுத்துள்ளது என்றும் அர்த்தமாகும்.

அதன் வால் சரிபார்க்கவும்... நான் ஒரு நாயின் வால் பற்றி பேசவில்லை, மேலே உள்ள சிறிய தண்டு என்று பொருள். அப்படி ஒன்று இருந்தால், தண்டை கவனிக்கவும்... அது பழுப்பு நிறமாக இருந்தால், அது பழுத்த மற்றும் சாப்பிட நல்லது என்று அர்த்தம், ஆனால் தண்டு பச்சை நிறமாக இருந்தால், அது மிக விரைவாக சரியாக வளர்ச்சி அடைவதற்குள் வெளியேற்றப்பட்டதாக அர்த்தம், எனவே நாம் அதை எடுக்கக்கூடாது.

நீங்கள் ஒரு தர்பூசணி சாப்பிடுவதற்கு முன், விதைகளைப் பாருங்கள்... அவை கறுப்பாக இருந்தால், அவை பழுத்தன, அதாவது அவை சாப்பிடுவது நல்லது, ஆனால் அவை வெண்மையாக இருந்தால், அவை சாப்பிடத் தயாராக இல்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு தர்பூசணியை வெட்டும்போதெல்லாம், அது உள்ளே நிறமாக இருக்கிறதா என்று பாருங்கள். அது அழகாகவும், பிரகாசமான, இருண்ட நிழலாகவும் இருந்தால், அது வெளிப்படையாக பழுத்திருக்கும், ஆனால் அது ஒருவித வெளிர் சிவப்பு மற்றும் சிவப்பு நிறத்தின் அழகான மெல்லிய நிழலைக் கொண்டிருந்தால், அது இன்னும் பழுத்திருக்கவில்லை

வட்ட வடிவத்தைக் கொண்ட தர்பூசணியைத் தேர்வுசெய்க. சில நேரங்களில், தர்பூசணிகள் தவறாக உருவாகும் மற்றும் ஒரு தர்பூசணி ஒரு நீள்வட்ட வடிவத்தில் இருப்பது சரியல்ல.

இப்போது சரியான தர்பூசணியை தெரிவு செய்யும் வழி முறைகளை அறிந்து கொண்டீர்கள் தானே!

சரி, தர்பூசணிகள் பற்றிய சில கூடுதல் வேடிக்கை தகவல்களை உங்களோடு

பகிர்கிறேன் இப்போது

தர்பூசணிகளின் தாய் வீடு ஜப்பான் என்பது உங்களுக்குத் தெரியுமா!!!! அது சரி, ஆகஸ்ட் 3 ஆம் தேதி வருடாந்திர தர்பூசணி நாள் என்பது உங்களுக்குத் தெரியுமா!!! அது சரி, தர்பூசணிகளுக்கு அவற்றின் சொந்த நாள் இருக்கிறது என அறிந்து நான் கூட ஆச்சரியப்பட்டேன் !!!

தர்பூசணிகள் புற்றுநோயை எதிர்த்துப் போராடவும், எடை குறைக்கவும் மேலும் பலவும் உதவுகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா!!! ஆகா!!!

- தர்பூசணிகளை ஒரு பழமாகவோ அல்லது காய்கறியாகவோ வகைப்படுத்தலாம்!!!!

வெவ்வேறு வகைகளில் தர்பூசணிகள் மொத்தம் 1200 வகைகள் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா!!

- மனித இனம் சுமார் 5,000 ஆண்டுகளாக தர்பூசணிகளை அறுவடை செய்து சாப்பிட்டு வருகிறார்கள்!!

- ஒரு சராசரி தர்பூசணி 92% நீரால் ஆனது!!!

- சதுர தர்பூசணிகள்!! ஆச்சரியமாக இருக்கிறது, இல்லையா? சீனா சதுர வடிவ தர்பூசணிகளை கூட உருவாக்குகிறது.

தர்பூசணிகள் பற்றி எனக்குத் தெரிந்த அனைத்தையும் இப்போது நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன், இந்த கட்டுரையை முடிக்க வேண்டிய நேரம் இது...

இந்த கட்டுரையை நீங்கள் விரும்புவீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் நேரத்திற்கும் அன்பிற்கும் நன்றி. பின்னர் சந்திப்போம்.



–
இலட்சனா சசிகுமார் (ஆங்கிலத்தில்)
ஐந்தாம் வகுப்பு
கனடா

இளவரசி இளங்கோவன் (தமிழில்)

# அன்னை

குறுதிக்கு சொந்தமாகி..,
பன்னீர் குடத்தில்
உதித்த பிண்டத்தின்
ஒற்றை மொழி உணர்வில்..,
அக்கணமே உயிர் கணக்கும்
வலிகளின் ரணங்களை,
புன்னகை கொண்டு
மெய்மறக்கும் ஒற்றை உறவு !

எதிர்பாராமல் ஏற்பட்ட விபத்தில்..,
தன்னை மறந்து 'அம்மா'
வென அனிச்சையில் கதற
வாய் திறக்கும் நொடிக்குள்..,
குமுறிய உதிரமவள்"..!

தூசிபட்ட கண்ணுக்கும்
துடிதுடித்துப் போய்,
துரத்தி வரும் தலைவலிக்கும் ஊரார்
கண்பட்டதெனச்
சுற்றிப் போட்டு..!
தீராத காய்ச்சலுக்கும்,
திடீரென்ற கண்ணீருக்கும்
தீரும் வரை செவிலியராகிப்
போனவள்.,

வேரென்ற ஒன்று மரம்சரியும்
நாள்வரை பற்றிப்பிணைத்தே
கிடக்கும்,
இவள் விண்ணுலகம் சேரும் வரை
துன்பமென்னை துரத்தியதில்லை !!!

என் முதல்நடை,
முதல் பேச்சை
இரசித்த உள்ளம்.,

இரத்தக்காயம் கண்டபோது மட்டும்
கதறிவிழுந்து கண்ணீர்த்துளியை
காயங்களில் நனைத்தவள் !

என் உயிரின் அரணவள்!!!
"அன்பின் இறகு முளைத்த தேவதை
"
"தாய்"

–

கவிமலர் த.சரண்யா,
கொழிஞ்சாம்பாறை,
பாலக்காடு,
கேரளா.



# யார் இவள்!
# ஏன் இப்படி?

கனிவின் மிகையால்
நெகிழ்ச்சி கொண்டு!

கண்ணீர் நிரம்பிய
என் விழிகள்!

பொங்கிப் புடைக்கிறது
என் நெஞ்சம்!

அதில் பொதிந்து கிடக்கிறது
உன் மீது கொண்டுள்ள
எல்லையற்ற அன்பு!

மௌன மொழி பேசும்
என் இதழ்கள் !

கட்டி அணைத்திட என்றுமே ஏங்கும்
என் கரங்கள் !

ஆரத் தழுவிக் கொடுக்க
நினைக்கும் முத்தம் !

தரணியை அளக்க நினைத்த என்னை
தன்நிலை மறக்க வைத்த இவள் !

யார் இவள்.!
ஏன் இப்படி .?

எல்லையில்லா சாத்தியம் பெற்றவள்!
தன்விகா என்ற பெயரும்
கொண்டவள்!

தெய்வம் தந்த செல்வமிவள்!

என் அக்கா பெற்ற மழலை இவள்!
எனக்கு ஆறுதல் தருகின்ற
அன்னையிவள்!

துயிலின் நடுவில்
திடுக்கிடும் போது
துணையாகும்
இவள் சுவாசத்தின் மென்மை!

வெண்மதியை மிஞ்சும்
இவள் முகம்!

உன் அன்புக்கு அப்பால்
இந்தப் பிரபஞ்சம்
ஒரு சிறுதுளியே!!!

–

கார்த்திகா இராமதாஸ்,
பொறியாளர்,
வடுவூர் புதுகை





# சிகரம் தொடு..!

உலகம் என்பது உருவாக்க வேண்டியது...
உனக்கு நீயே உருவாக்கு...!?
நிலமை எப்படி இருந்தால் என்ன...
நீயே முயன்று மாற்றிவிடு....!?
ஏழ்மையும் பணமும் உன் விதியல்ல...
எதனையும் நீயே மாற்றிடலாம்....!

படித்த படிப்போ பாதைகள் காட்டும்..
பகட்டாய் நுழைவது உன் வேலை..!?
கிடைத்த பணியோ சிகரம் காட்டும்...
முயன்று அடைவது உன் லீலை...!?
வெற்றி உனக்கு நம்பிக்கை கொடுக்கும்...
வென்று சாதிப்பது சுக வேளை...!?

நுழைந்த துறையில் தடம் பதித்தால்...
சமூகத்தில் உன் இடம் புதுப்பாடம்...!?
பயந்து கொண்டே படிகள் ஏறினால்...
பல்லிகள் கூட பூதமடா....!?
மனதில் உறுதியாய் நீ முயன்றால்...
மலையும் கூட மண்ணாகும்....!?
சிறிய முயற்சிகள் செய்வது விடுத்து...
சீற்றம் கொண்டு புறப்படுவாய்...;?
சிகரம் தொட்டு உலகம் போற்ற
உயர்ந்து நீயும் வாழ்ந்திடுவாய்....!?

–

முனைவர் சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.

# உலக கடிதம் எழுதும் தினம் செப்டம்பர் – 1

முகவரி மாறாமல்
முகமுகமாய் பேசிக் கொண்டோம்
கடிதம் கண்டவுடன்....

தபால்காரரின் மிதிவண்டி
மணியோசை
ஆலய மணியோசையானது
கடிதம் எதிர்பார்ப்போருக்கு

எண்ணங்களைப்
பிரதிபலிக்கும் கண்ணாடியானது
கடிதம் எழுதுவோருக்கு

ஒட்டியிருப்பது
பசையல்ல பாசம் என்றது
கடிதம் பிரிப்போருக்கு

நலம் நலமறிய ஆவல்
என்ற வரிகள்
மனத்திற்கு மருந்தானது
கடிதம் வாசிப்போருக்கு

தொலைத்தூர உறவுகள்
தொலைந்துப் போகாமல் காத்தது
கடிதத் தொடர்பு

பல செய்திகளைப்
பத்திரமாய் கொண்டு சேர்த்தது
கடிதப் போக்குவரத்து

கண்காணிப்பு இல்லை
காவலும் இல்லை
அஞ்சாமல் அனுப்பினோம்
அஞ்சல முத்திரையுடன்

குறுஞ்செய்தியால்
குறுகிப் போனது
இயந்திர உலகம் மட்டுமல்ல
நம் இதயமும் தான்

மீண்டும் தொடர்வோம்
கடிதம் எழுதுவதை......

_
ஜெரோஷா,
திருப்பூர்



ஆனந்தன்
திருப்பூர்.

# நீ திரும்பிப் பார்க்கும் போதெல்லாம்

உன்னை விரும்பிப் பார்க்கிறது
என் கண்கள்.

உன் விரல் பட்ட
காபி கூட
சர்க்கரையில்லாமல்
இனிக்கிறதே.

நீண்டு வளராமல்
ஹைக்கூவாகவே உள்ளது
உன் சடை.

ஒற்றைச்சடைக்கு ஓராயிரம்
கவிஞர்கள் யாருக்கு
முதல் பரிசோ.

காய்ந்த துப்பட்டாவை
எடுத்துச் செல்கிறாய்
நந்தவனமாய் மனக்கிறது
கொல்லையில் கொடி.

உன் கண்கள்
பிளாக் அண்டு ஒயிட்டானதால்
என் இதயம் ஈஸ்ட்மேன்
கலரானது.

என்னவளின் பெருவிரல்
நகமொன்று பெரிதாய்
மின்னியது வானத்தில்.

# விடியலின் விளிம்பில் மானுடம்....

செத்துப் பிழைத்த
பயங்கரப் பொழுதில்
நித்திரை கொன்று
நிஜங்களைத் தின்று
கோரப் பிணியில்
இகபர சுகத்தோடு
கண்ணீர் வடித்த மானுடம்
உறங்காத உழைப்பால்
அயராத அரவணைப்பில்
அழிந்து போகாமல்
விடியலின் விளிம்பில் உலாப்போகும்
உல்லாசப் பயணத்தில்
நானும் ஓர் பயணியாய்
சென்றுகொண்டே இருக்கிறேன்....

## மௌனங்களின் அரவணைப்பில்

வார்த்தை ஜாலங்களை
வரிசையாக அடுக்கி
நிழல் திரியும் இளவேனிலில்
நிஜங்கள் தடுமாறும்
உணர்ச்சிப் பெருக்கெடுத்து
உலவிடும் மாலை நேரத்தில்
உனக்கும் எனக்குமான
உரையாடல் எங்கோ தொடங்கி
எங்கோ முடிகிறது...

## ஒளியின் தனி மதிப்பு உலவுவது எக்காலம்!

அணி வகுக்கும் வாத்தியங்கள்...
தொங்கிக் கொண்டிருக்கும் வண்ண
ஆடைகள்....
பக்கத்துக் கழியில்
கண்ணாடி பதித்த விதவித
ஆபரணக் கட்டைகள்
ஒற்றை அகலில்
ஒரே நேர்கோட்டில்
சுடர் விடும் தீபம்
விளக்கைச் சுற்றும்
விட்டில்களாய் ஆட்டக்காரர்கள்
அரிதாரம் பூசும்
அற்புத வாழ்வை
இரவில் ஏற்று
வெளிச்சம் பட்டவுடன்
உலகப் பொதுவெளியில்
திறனற்ற தீப்பொறியாய்
திரிந்து கொண்டே இருக்கும்
கூத்தாடிகளின் வாழ்வில்
ஒளியின் தனி மதிப்பு
உலவுவது எக்காலம்.....

--

**இளங்கவி**
**நடுநாட்டுத்தமிழன்,**
குடியநல்லூர்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

# நயம்பட உரை

நா... நயப் பேச்சில்
நாணயம் பார்க்கும்
நா நய மனிதர்கள்
நாட்டினில் முலைத்திட்டார்
பின் நயம்பட உரைத்து
இனி நடப்பது யாது?

பூக்களும் சாயம் பூசியே!
பூத்திடும்... தாய்த்திரு நாட்டில்
வேர்களும் வெள்ளிக் காசினை
கேட்டே...! வீரிய பழங்களை
விரைவில் கொடுக்கும்
சாத்திரம் படைத்த.... மனித
சூத்திர தேசத்தில்
நயம்பட உரைத்து
இனி நடப்பது யாது?

சீக்கிரம் உலகின்
சீமாட்டியாகிட!
போக்கிடம்மாற்றி
பொய்யுரை புணைந்து
புணர்ச்சிக்குள் விழுந்து
பொருட்குவியல் சேர்த்திட
நெஞ்சு பொருக்குதில்லையோ!
என்போரிடம்....
நயம்பட உரைத்து
இனி நடப்பது யாது?

மீசை முலைத்திட்ட உடனே
முருக்கேரித்திரிந்து..
மூலையிழந்து...
டாஸ்மாக் சாக்கடையில் விழுந்து
பச்சிளம் பிஞ்சிடம்
காம எச்சிலைத்துப்பிடும்
எச்சைகள் நிறைந்து
கொச்சையாய் வாழும்
குற்றங்கள் சூழ்ந்த பூமியில்
நயம்பட உரைத்து
இனி நடப்பது யாது?

உயிர்கொல்லி நோயது
உலகையே மிரட்ட
உண்பதே என்செயல்
என்பதை உணர்த்தி
கோயம்பேட்டில் கொலுவைத்து
சென்னை பட்டிணத்தை
மயாணப்பாதையாக
மாற்றியவரிடம்
நயம்பட உரைத்து
இனி நடப்பது யாது?

ஆத்திரம் வருகுது
மனிதப் பாத்திரம் செய்திடும்
தோத்திரவார்த்தைகள்.
சேற்றினில் புரண்டு
செந்தாமரை நானென்று
வாசமாய் பேசியே
நாசமாய் மாற்றிடும் நரிகளிடம்
நயம்பட உரைத்து
இனி நடப்பது யாது?

திட்டங்கள் யாவும்
சட்டங்கள் ஆகட்டும்
குற்றங்கள் யாவும்
குறைந்தே ஒழியட்டும்
அப்போது பேசுவோம்.. நயம்பட.

–

கவிஞர். இதயம்கிருட்டிணா,
செயலாளர்,
தியாகதுருகம் தமிழ்ச்சங்கம்.
அலைபேசி: 9788572135

# இயற்கையோடு மனமும் இணைந்ததே

இன்னும் இன்னும் உன் நினைவுள்
மெல்ல மெல்ல
என்னை திகைகக்க செய்கிறதே...

மலை நீரூற்று போல என்னுள் காதல்
ஊற்று பாய்கிறதே ..

என்னுள் எழும் உன் நினைவுகள்
மத்தளம் போடுகிறதே...

சிறுக்கி உன் நேசம் எனை
கிறுக்கனாக்குதே...!!!

என்னுள் கூடு பாயும் உன் நினைவுகள்
வீடேற செல்ல முடியாமல்
தவிக்கவிடுதே...

கால சுழற்சியோ காதல் சுழற்சியோ
மாயம் செய்யுதே .....!!!

நேரில் நின்று வந்தனை செய்வாயோ
இல்லை உன் நினைவுகளாளே எனை
வதம் செய்வாயோ....!!!!

---

நான் மௌனித்திருக்கும் வேலையில்
எங்கோ யாரோ எனக்கான கவிதையை
எழுதிகொண்டிருக்கிறார்கள்.....!!!

---

தீர்த்த மழையில் பூமி குளிர்ந்ததா ...
நனைந்த மலரில் நறுமணம் வீசுதா...

பூமி வறண்டதென வானம்
அழுகிறதா...!!!

விரிந்த மலர் கனியாக கனிந்ததா....!!
சிறு மழைத்துளியில் சிட்டுக்குருவி
சிலிர்த்ததா...!!!

பூமி தவம்கிடக்க வானம்
பொழிந்ததா....!!!

மழையில் நனைந்த மனம்
மகிழ்ந்ததா...!!!

மழை வருமென மயிலும்
தோகைவிரித்ததா...!!

கவிஞனின் கனவில் கவிதையும்
பிறந்ததா....!!!

—

நீளும் கரம்
விழி நனையும் இருளில்
துயர் துடைக்கும் உன் கரம்
தேடி என் கரமும் நீளுதே....!!!!

–

ச. இராஜ்குமார்

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ஞாடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal    ThiravukolMagazine